**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை: திரு.கே.பாஸ்கர், பி.ஏ., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி** (FAC)

திருவள்ளுவராண்டு, 2054 சோபகிருது வருடம், ஆடி திங்கள் 09-ம் நாள்

2023-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25-ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.143/2021**

(CNR No. TNTL120000172021)

புஷ்பம் ..... வாதி

/எதிர்/

1. கணேசன்
2. முருகன் ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (25.07.2023) இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சத்யன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாண்டியராஜன் மற்றும் திரு.V.M.பிரபாகரன் ஆகியோர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் 2ம் பிரதிவாதியை பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டும், பிராதை சீர்திருத்தம் செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையிலும், பிராதை சீர்திருத்தம் செய்வதற்கு வாதி தரப்பில் எந்த வித நடவடிக்கை எடுக்காத காரணத்தாலும், வாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், வாதியின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

பிராது தபசில் கண்ட சொத்து வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என 1ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், பிராது தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதியோ, ஷையாரின் வகையாட்களோ எவ்வித கட்டுமானமும் கட்டி எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என 1ம் பிரதிவாதிக்கு

எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதன் தபசில் கண்ட சொத்தையும் சேர்த்து 1ம் பிரதிவாதியின் தாத்தா லெட்சுமணன் நாடார் கடந்த 11.03.2021ம் தேதியில் இந்த 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இல்லாநிலை என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு 1ம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

No representation on the plaintiff side. Already sufficient opportunity given. However steps for amendment not taken. The plaintiff is called absent. Hence this suit is dismissed for default with costs.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-கே.பாஸ்கர்**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**